**<u>செய்தி வெளியீடு எண். 974</u>** **<u>நாள். 15.12.2009</u>**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

## ஜீனியர் விகடன் செய்திக்கு மறுப்பு

ஜீனியர் விகடன் 13.12.2009 நாளிட்ட வார இதழில் ''**திருச்சி அரசு அஸ்பத்திரியில் ஒரே வருடத்தில் 750 குழந்தைகள் ஜனனம் . . . அங்கேயே மரணம்**'' என்ற தலைப்பிலும், 16.12.2009 நாளிட்ட இதழில் **பிரசவ வார்டு பயங்கரத்தில் வெளிவராத உண்மைகள்!** என்ற தலைப்பிலும் ஒரு தவறான செய்தியை, மக்களிடையே பீதியை ஏற்படுத்தும் வகையில் உண்மைக்கு மாறான தகவல்களுடன் வெளியிடப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனை ஒரு பரிந்துரைக்கப்படும் மருத்துவமனையாகும் (Referral Hospital). இந்த மருத்துவமனைக்கு திருச்சி நகரம் மட்டுமல்லாது, இம்மாவட்டத்தைச் சுற்றியுள்ள பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்கள் மற்றும், இம்மாவட்டத்தின் புறநகர் பகுதியில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலிருந்து நோய் முற்றிய நிலையிலும், இறக்கும் தருவாயிலும் குழந்தைகளும், உடல் நலமற்ற தாய்மார்களும் இம்மருத்துவமனைக்கு கொண்டு வரப்படுகிறார்கள். அப்படி வரும் நோயாளிகள் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி சில குழந்தைகள் இறந்துவிடுகின்றன.

திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவமனையின் பிரசவ வார்டுக்கு ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் விநியோகம் செய்யாததுதான், குழந்தைகள் இறப்பிற்கு காரணம் என கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பான செய்தியாகும். 2008—ஆம் ஆண்டில் 211 பிராணவாயு உருளைகள் பிரசவ வார்டுக்கும், 212 உருளைகள் குழந்தைகள் வார்டிலும், 413 ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் தீவிர சிசு பராமரிப்பு வார்டுக்கும் ஆக 836 பிராணவாயு உருளைகளும், 2009—ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் வரை 153 உருளைகள் பிரசவ வார்டுக்கும், 246 உருளைகள் குழந்தைகள் வார்டிலும், 355 சிலிண்டர்கள் தீவிர சிசு பராமரிப்பு வார்டுக்கும், ஆக மொத்தம் 754 சிலிண்டர்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரசவ வார்டு மற்றும் சிசு பராமரிப்பு வார்டுகளுக்கு பிராணவாயு உருளைகள் தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் மத்திய பிராணவாயு கிடங்கும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 24 மணி நேரமும் எல்லா முக்கியமான வார்டுகளுக்கும் குறிப்பாக பிரசவ வார்டு மற்றும் சிசு பராமரிப்பு வார்டுகளுக்கும் தங்கு தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆக்ஸிஜன் கொடுக்காததால் தான் குழந்தைகள் இறந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது தவறான செய்தியாகும்.

திருச்சி அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் ஒரு மாதத்திற்கு சுமார் 225 முதல் 250 பச்சிளம் குழந்கைகள் உள்நோயாளியாக அனுமதிக்கப்படுகின்றனர். சராசரியாக ஒரு மாதத்தில் 25 குழந்தைகள் சிகிச்சை பலனின்றி இறக்கின்றன. இறப்பு விகிதம் பத்து சதவீதமாகும். 2008—ஆம் ஆண்டில் இம் மருத்துவமனையில் 7451 பிரசவங்களும், 2009—ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் வரை 6663 பிரசவங்களும் நடைபெற்றுள்ளன. இதில் 2008—ஆம் ஆண்டில் 379 குழந்தைகளும், 2009—ஆம் ஆண்டில் 339 குழந்தைகளும் இறந்துள்ளனர்.

இந்த மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பிரசவங்களின் விவரம் | 2008 | 2009 (11/2009 வரை) |
|---|---|---|---|
| 1 | அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை | 2631 | 2811 |
| 2 | இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை | 298 | 293 |

பச்சிளம் குழந்தைகளின் இறப்பு, மாதம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது

| மாதம் | அனுமதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகள் விபரம் | | இறந்த பச்சிளம் குழந்தைகளின் எண்ணிக்கைகள் | |
|---|---|---|---|---|
| | *2008* | 2009 | *2008* | 2009 |
| ஜனவரி | *195* | 230 | *19* | 25 |
| பிப்ரவரி | *170* | 237 | *19* | 35 |
| மார்ச் | *168* | 258 | *30* | 30 |
| ஏப்ரல் | *258* | 305 | *27* | 20 |
| மே | *190* | 180 | *16* | 25 |
| ஜுன் | *257* | 304 | *17* | 25 |
| ஜுலை | *207* | 212 | *15* | 23 |
| ஆகஸ்ட் | *180* | 264 | *40* | 24 |
| செம்டம்பர் | *248* | 272 | *31* | 33 |
| அக்டோபர் | *250* | 268 | *32* | 22 |
| நவம்பர் | *267* | 281 | *28* | 31 |
| டிசம்பர் | *241* | -- | *24* | -- |
| **மொத்தம்** | ***2631*** | **2811** | ***298*** | **293** |

இந்த மருத்துவமனையில் இறந்த குழந்தைகள் ஆக்ஸிஜன் இல்லாததால் தான் இறந்தது என்பது தவறான தகவலாகும்.

குழந்தைகள் நலப்பிரிவிற்கு தற்போது இணை பேராசிரியர் நிலையில் உள்ள ஒரு மருத்துவர் தலைமை மருத்துவராக பொறுப்பு வகித்து வருகிறார். நான்கு உதவி பேராசிரியர்கள் மூலம் குழந்தைகள் நலப் பிரிவு பணிகள் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. தீவிர சிசு பாராமரிப்பு பிரசவத்திற்கென கூடுதாக நான்கு மருத்துவர்கள் மற்றும் ஒன்பது செவிலியர்கள் நியமனம் செய்ய அரசு அனுமதித்துள்ளது. ஒன்பது செவிலியர்கள் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டு, இவர்கள் தற்போது சென்னை குழந்தைகள் நல மருத்துவமனையில் 45 நாட்கள் சிறப்பு பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி முடிந்து அடுத்த வாரத்தில் திருச்சி அரசு மருத்துவமனையில் தீவிர சிசு பராமரிப்பு பிரிவில் பணிபுரிய உள்ளனர். தீவிர சிசு பராமரிப்பு பிரிவிற்கென தனியாக ஒரு கட்டடம் கட்ட ரூ.25 இலட்சம் ஏற்கனவே தேசிய ஊரக சுகாதாரத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. விரைவில் இப்பணி தொடங்க உள்ளது. குழந்தைகள் நலப்பிரிவிலும் தீவிர சிசு பராமரிப்பு பிரிவிலும் அதற்கென பிரத்தியோகமாக சிறப்பு பயிற்சி பெற்ற செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டு 24 மணி நேரமும் பணிபுரிந்து வருகிறார்கள்.

இறப்பு ஆய்வுக்கூட்டம் ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளி கிழமையன்று நடைபெற்று வருகிறது. அவ்வாறு நடைபெறும் கூட்டத்தில் குழந்தைகள் நலப்பிரிவிற்கு தேவைப்படும் உபகரணங்கள் போதிய அளவு உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

திருச்சி அரசு மருத்துவமனையில் நிகழும் இறப்புகள் மட்டும் மாநகராட்சியில் பதிவு செய்யப்படுவதில்லை. இந்த மருத்துவமனையில் நிகழும் இறப்புகள் மட்டும் அல்லாது

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து, தனியார் மருத்துவமனை மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளில் ஏற்படும் இறப்புகளும் பதிவு செய்யப்படுகின்றன. எனவே மாநகராட்சியில் பதிவான இறப்புகளைக் கொண்டு அவைகள் அனைத்தும் திருச்சி அரசு மருத்துவமனையில் நிகழ்ந்ததாக கட்டுரை வெளியிட்டுள்ளது சரியான நிகழ்வு அல்ல.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மிகச் சிறப்பாக உள்ளதால் தான், மருத்துவக் கல்லூரி உள்ள மாவட்டம் மட்டுமின்றி அதனைச் சுற்றி உள்ள மாவட்டங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் மட்டும் அல்லாது தனியார் மருத்துவமனைகளிலும் ஆபத்தான நிலையில் பச்சிளம் குழந்தைகளை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கின்றனர். இந்த மருத்துவமனைகளில் உடனடியாக உரிய மேல் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், பச்சிளம் குழந்தையின் குறைவான எடை போன்ற பல்வேறு காரணங்களினால் இறப்புகள் ஏற்படுகின்றன. இது போன்ற பச்சிளம் குழந்தை இறப்புகள் மதுரை இராஜாஜி மருத்துவமனையில் சுமாராக ஆறுநூறும், சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் சுமார் ஆயிரமும், சென்னை கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் சுமார் இருநூறும், சென்னை எழும்பூர் மகப்பேறு மகளிர் நோயியல் நிலையம் மற்றும் அரசு தாய் சேய் நல மருத்துவமனையில் சுமார் ஆறுநூறும் ஏற்படுகின்றன. திருச்சிராப்பள்ளி அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் சுமார் முன்னூறு இறப்புகள் கடந்த ஆண்டும் நடப்பு ஆண்டும் நிகழ்ந்துள்ளன.

இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் **16.60** இலட்சம் சிசு மரணங்கள் நிகழ்கின்றன. தமிழ்நாட்டில் சுமார் **35,000** சிசு மரணங்கள் நிகழ்கிறது. பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையின் உயிரும் விலை மதிப்பற்றது என்பதை உணர்ந்து, குழந்தைகள் இறப்பைத் தடுக்க இந்த அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

*****

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.